சுருக்கம்

தொழிலாளர் நலத்துறை – குன்னூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தை ஈரோடு தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகமாக பணியாளர்களுடன் பணியிடப் பெயர்ச்சி செய்தல் – ஆணைகள் வெளியிடப்பட்டது – பதிலீட்டகற்றீடு (Supersession) செய்து ஒருங்கிணைந்த ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்(ஜி1)துறை

அரசாணை (நிலை) எண்.148

நாள் 20.10.2021
பிலவ வருடம், ஐப்பசி–3
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.146, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ2) துறை, நாள் 21.09.1999.
2. அரசாணை (நிலை) எண்.10, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 07.02.2002.
3. அரசாணை (நிலை) எண்.66, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 09.07.2014.
4. அரசாணை (நிலை) எண்.36, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஜி1) துறை, நாள் 18.02.2021.
5. அரசாணை (டி) எண்.180, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஜி1) துறை, நாள் 29.04.2021.
6. தொழிலாளர் ஆணையரின் கடித எண். இ3/8036/2018, நாள் 06.07.2021.

------

ஆணை:

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், குன்னூர் தொழிலாளர் துணை ஆணையர் (தற்போது இணை ஆணையர்) அலுவலகம் உருவாக்கப்பட்டு, அவ்வலுவலகத்திற்கு பல்வேறு அலுவலகங்களிலிருந்து பல்வேறு நிலையில் உள்ள மொத்தம் 18 பதவிகள் பணியிடப் பெயர்ச்சி செய்யப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், அரசாணை எண்.146, நாள் 21.09.1999–க்கு திருத்தம் செய்யப்பட்டு காவலர் பணியுடன் தூய்மைப்பணி (Watch–cum–Sweeper) பணியிடம் வரிசை எண் 11–ல் இணைக்கப்பட்டுள்ளது.

(த.பி.பா.)

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், குன்னூர், தொழிலாளர் துணை ஆணையர் (தற்போது இணை ஆணையர்) அலுவலகத்திற்கு ஒரு ஊர்தி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் ஒரு ஊர்தி ஓட்டுநர் பதவியினை அனுமதித்தும் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

4. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட தொழிலாளர் ஆணையரின் கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.36, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 18.02.2021 மற்றும் அரசாணை (டி) எண்.180, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 29.04.2021 ஆகியவற்றில் புள்ளிவிவர ஆய்வாளர் பணியிடம் உட்பட விடுபட்ட சில பணியிடங்களை ஒருங்கிணைத்தும், குன்னூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தை கீழ்க்கண்ட பணியிடங்களுடன் ஈரோடு தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகமாக பணியிடப் பெயர்ச்சி செய்து உத்தரவிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:–

| வ. எண். | பதவி பெயர் | பதவி எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொழிலாளர் இணை ஆணையர் | 1 |
| 2. | கண்காணிப்பாளர் | 1 |
| 3. | புள்ளிவிவர ஆய்வாளர் | 1 |
| 4. | உதவியாளர் | 2 |
| 5. | கணக்கர் | 1 |
| 6. | இளநிலை உதவியாளர் | 3 |
| 7, | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 8. | தட்டச்சர் | 1 |
| 9. | அலுவலக உதவியாளர் | 2 |
| 10 | இரவுக் காவலர் | 1 |
| 11. | ஊர்தி ஓட்டுநர் (ஈப்பு வாகனத்துடன்) | 1 |
| | மொத்த பணியிடங்கள் | 15 |

5. மேலும், குன்னூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில், தொழிலாளர் உதவி ஆணையர்–1, உதவியாளர்–1, சுருக்கெழுத்து தட்டச்சர்–1 ஆகிய மூன்று பணியிடங்களுடன், குன்னூரிலேயே தொடர்ந்து இயங்க அனுமதியளித்து ஆணைகள் வழங்குமாறும், மேலும், அலுவலக கோப்புகள், ஆவணங்கள் மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றினை குன்னூரில் இருந்து ஈரோடுக்கு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவினம் ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்)

(தொடரா செலவினம்) மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வழங்குமாறும் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

6. தொழிலாளர் ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, மேலே 4 மற்றும் 5–ல் படிக்கப்பட்ட அரசாணைகளை **பதிலீட்டகற்றீடு (Supersession)** செய்தும், விடுபட்ட பணியிடங்களை ஒருங்கிணைத்தும், மேலே பத்தி –4–ல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மொத்தம் 15 பணியிடங்களுடன், குன்னூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்தை, ஈரோடு, தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகமாக பணியிடப் பெயர்ச்சி செய்தும் அரசு ஆணையிடுகிறது. மேலும், குன்னூர் தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களில், தொழிலாளர் உதவி ஆணையர்–1, உதவியாளர்–1, சுருக்கெழுத்து தட்டச்சர்–1 ஆகிய மூன்று பணியிடங்களுடன் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம் குன்னூரிலேயே இயங்கவும், அலுவலக கோப்புகள், ஆவணங்கள் மற்றும் தளவாடங்கள் ஆகியவற்றினை குன்னூரில் இருந்து ஈரோடுக்கு எடுத்துச்செல்வதற்கான போக்குவரத்துச் செலவினம் ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம் மட்டும்) (தொடரா செலவினம்) மேற்கொள்ள நிதி ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

**"2230 – தொழிலாளர், வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு – 01 – தொழிலாளர் 101 – தொழில் உறவுகள் – மாநிலச் செலவினங்கள் – AA – இணக்க பணியாளரமைப்பு – 373 போக்குவரத்துச்செலவுகள் – 01 போக்குவரத்து செலவுகள்"**

**IFHRMS (ததொகு 2230 – 01 – 101 – AA – 37301)**

8. மேலே பத்தி–6–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.30,000/– வரும் 2021–2022–ஆம் நிதியாண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள தொழிலாளர் ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகிறது. 2021–2022–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்(தொ.ந.(ம) தி.மே.) துறைக்கு அனுப்பிடும் பொழுது, மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும் தொழிலாளர் ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை, நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அலுவல் சாரர்பற்ற எண்.43097/நிதித்(தொ.ந.(ம)தி.மே.)துறை/2021, நாள் 13.10.2021 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.590 (ஐநூற்று தொன்னூறு) மூலம் பெற்ற ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிர்லோஷ் குமார்
அரசு செயலாளர்

பெறுநர்:
முதன்மை செயலர் / தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
தொழிலாளர் இணை ஆணையர், குன்னூர்,
(தொழிலாளர் ஆணையர் மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை–600 018.
கருவூல அலுவலர், உதகமண்டலம் மற்றும் ஈரோடு

நகல்:–
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித் (தொ.ந.(ம)தி.மே) துறை/(வ.செ.பொ.2)/(வ.வ–I), சென்னை–600 009.
அரசுச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர்,
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (இ) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்.
சுத்தநகல் கோப்பிற்கு (கோ.எண்.6031/ஜி1/2021)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கு. சக்திகுமாரன் 21.10.2021
(கு. சக்திகுமாரன்)
அரசு சார்புச் செயலாளர்